# 2018 மார்கழி மாதம் சங்க குடும்ப தின நற்செய்தி

## *"நத்தார் என்பது அன்பின் விழாவாகும்"*

01. ஆரம்பபகழ்ச்சி :

புபுது பாடல் இல. 02 "நமோ நமோ தூய ஆவியானவரே…"

02. புகழ்ச்சிக்கான நோக்கு : உரோமையர் 8:28

**"மேலும் கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு அவர்கள் நன்மைகாகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பத நமக்குத் தெரியும்."**

2018ம் ஆண்டு இறுதி காலத்திற்கு வந்திருக்கும் நாம் வருடம் முழுவதும் இறை தந்தையின் அளவு கடந்த அன்பினால் எமக்கு அன்பு செய்த அனுபவங்களை முன் கொண்டு அவரை புகழ்வதற்கு ஆயத்தமாகுவோம். புனித சின்னப்பர் அன்று உரோமையருக்கு கூறிய வார்த்தைகள் நிகழ்காலத்தில் வாழும் உங்களுக்கும் எனக்கும் கூறி இருக்கின்றார் என்பது உங்களதும் எனதும் அனுபவமல்லவா? எமது வாழ்வின் நாம் கடந்து வருகின்ற பலவிதமான பாதகமான நிலைகள், கஷ்டமான சந்தர்ப்பங்கள், இருளின் மணித்தியாலங்கள், மரணத்தின் அனுபவங்களினுள் மறைந்து இருக்கின்ற நன்மையை காண்பதற்கு நாம் பெற்று இருக்கின்ற விசேடமான வரப்பிரசாதத்திற்காக அதிக அதிகமாக இறைவனைப் புகழ்வோம். இவ் அனைத்தினுள்ளும் இருக்கின்ற நன்மையை காணாமல், பாதகமான நிலைகளினுள், இருளுக்குள் தனிமையாகி இருந்த சந்தர்ப்பங்களுக்காக மனம்வருந்துவோம். புதிய பிறப்பை எதிர்பார்த்து நத்தாரை கொண்டாடுவதற்கு ஆயத்தமாகும் இந்த காலத்தில் கிறிஸ்துநாதரின் இரண்டாம் வருகைக்காகவும் ஆயத்தத்தை எமக்குள் ஏற்படுத்துமாறு இறைவனிடம் வேண்டியவாறு புகழ்வோம். புபுது (சிங்கள) பாடல் இல. 178 பொருத்தமான பாடலைப் பாடவும்

03. மீளப்பார்த்தல் :

- புபுதுவ மக்கள் வார்த்தையினுள் வார்த்தையை தேடும், கிடைக்கின்ற வார்த்தையினுள் வாழ்வதற்கு, சாட்சி பகிர்வதற்கு விசேடமான அழைப்பை பெற்ற மக்களாவோம். ஆகையால் 2018ம் வருடத்தில் வாழ்ந்தவாறு, வாழவைப்பதற்கு எமக்கு கிடைத்த வார்த்தைக்கு விழிப்புற்று, அனுபவங்களை பகிர்ந்து கொள்வது மிகமுக்கியமாகும்.
- நான்கு பேர் கொண்ட குழுவில் பகிர்ந்து கொள்ளவும்.

i. 2018ம் வருடத்திற்காக எமக்கு கிடைத்த தலைப்பு "உமது வார்த்தையும் விருப்பமும் அக்கினியாகும் ஆசீர்வாதமாகும்." இவ் வார்த்தையினுள் வாழ்ந்த உங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.

ii. இவ்வருடம் முழுவதும் வாழ்வதற்கு இன்னும் 06 வார்த்தைகள் எமக்கு கிடைத்தது. இதற்கு உங்களது பிரதிசெயல் எவ்வாறு என்பதை கலந்துரையாடுங்கள்.

i. மனம்வருந்துதல்

ii. புனித யோசெப் வாஸ் பணி
iii. ‘புகழ்ச்சி ஆகட்டும்’ சுற்று மடலை முன்கொண்டு இயற்கை சூழலிற்கு அன்பு செய்தல்
iv. ஏளிமை வாழ்வின் வழியாக சங்கமமாகுதல்
v. எதிர்ப்பின் அடையாளமாகுதல்
vi. புபுதுவ பயணம் திருச்சபைக்காகவே.

04. நாளுக்குரிய நற்செய்தி : “நத்தார் என்பது அன்பின் விழாவாகும்”

01ம் பகுதி :

நத்தார் ‘நதாலே’ என்ற லத்தீன் வார்த்தை வழியாக அறிமுகமாகியது. அதின் அர்த்தம் பிறப்பாகும். நத்தார் முக்கியமாக பிறந்தநாள் விழாவாகும். மனித குலம் தொடர்பான வரலாற்றை மாற்றி அமைத்த குழந்தையின் பிறந்த நாளை கொண்டாடும் தினம் நத்தாராகும். நத்தார் நற்செய்தியாகும். மகிழ்ச்சியின் விழாவாகும். இன்று நத்தாரை அநேகமாக உலகத்தில் வாழும் அனைவரும் மதவேறுபாடு இன்றி இதய பூர்வமான மகிழ்வோடு கொண்டாடும் தினமாக மாறியுள்ளது. நத்தார் தினம், இறைவன் தமது அன்பை முன்கொண்டு ஒரே பேறான மகனை மனிதனாக இவ்வுலகிற்கு அனுப்பிய நாளாகும். ஆகையால் இது நற்செய்தியாகும். அதேபோல் அன்பின் விழாவை கொண்டாடும் நாளாகும்.

- புனித லூர்க்கா 2:7 **“அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவெ பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்”**
- புனித லூர்க்கா 1:32 **“அவர் பெரியவராயிருப்பார். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்”**

- மேற் குறிப்பிட்ட திருவிவிலிய பகுதிகளை வாசித்து நத்தாரை முன்கொண்ட உங்களது நோக்கு என்ன என்பதை நான்கு பேர் கொண்ட சிறு சங்கத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

2ம் பகுதி :

- நத்தாரின் உண்மையான உரிமையாளர்கள் யார்? இன்று நத்தார் யாருடையது?
- நான்கு பேர் கொண்ட சிறு சங்கத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

வார்த்தையின் ஊழியர்க்காக :

- ஆதி பெற்றோரின் கீழ்படியாமையினால் அடிமை தனத்தை உரிமையாக்கிக் கொண்ட மனிதனுக்கு விடுதலை, சுதந்திரமான வாழ்வை உரிமையாக்கிக் கொடுப்பதன் இறை வாக்குறுதியை நிறைவேற்றும் முகமாக எம் இயேசு ஆண்டவரை இறைவன் இவ்வுலகிற்கு அனுப்பினார்.

- நத்தாரின் பரம யதார்த்தமாகிய பிறப்பு, புதிய நிலை, மீட்பை உரிமையாக்கிக் கொடுப்பதற்கு வந்த இயேசு ஆண்டவர் உலத்தினுள் தனிமைப்படுத்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட சிறுமையுற்ற, மக்களை உயர்த்துவதற்கு வந்தருளினார்.
- கிறிஸ்துநாதரின் பிறப்பு முதலாவதாக் அன்றைய சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத, எளிய மக்கள் பகுதினராகிய இடையர்களுக்கே அறிவிக்கப்பட்டதும்.
- ஆகையால் நத்தாரின் உண்மையாக உரிமையாளர்கள் ஏழ்மை, குடிபழக்கம், போதைவஸ்து ஆகியவற்றால் பிரிந்து இருக்கின்ற குடும்பங்கள், தனிமையாகி ஒதுக்கப்பட்டு தமது குடும்ப வாழ்வை கொண்டு செல்ல முடியாத நிலையில் இவ்வுலகில் துன்பப்படுபவர்கள், வைத்தியசாலையில் விசேடமாக புற்று நோய் வைத்தியசாலைகளில், வயோதிப இல்லங்களில், அநாதை முகாம்களில், சிறையினுள், அநாதை இல்லங்களில், தனிமையாகி பலவிதமான விதத்தில் துன்பப்படுபவர்களே. நத்தார் இருள் நிறைந்த அவர்களது வாழ்விற்கு ஒளியை உதயமாக்குவதற்கே.
- இன்று நத்தாரை தொழினுட்ப முறையினால் பத்திரிகைகளினால். மக்களை தவறான வழியில் இட்டுசென்று வியாபாரத்தை வளர்ச்சி அடைய செய்பவர்களதே. போதை பொருள் விற்பனை செய்பவர்களதே. புலவிதமான உணவுவகைகள், ஆடை அணிகளை விற்பனை செய்பவர்களதே.
- நத்தார் அன்று நல்லிரவு பிறந்த இயேசு ஆண்டவரை கொண்டாடுவதற்கு அன்று ஆலயத்தில் திருப்பலிக்கு பங்கு கொள்வதை விட ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில், சமூக அரங்குகளில், பெரியஅளவிலான சூது நிலையங்களில் நத்தாரை கொண்டாடுபவர்கள் அநேகர்.

05. எம் பக்கம்

- மறுமலர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் எங்கே இருக்கின்றோம்.? சிந்தித்து பார்ப்போம்.
- நாம் இருக்கின்ற நிலையை அறிந்துக் கொண்டு அர்த்தமுள்ள நத்தாரை கொண்டாடுவதற்கு முன்வருவோம்.
- நாமும் உலகில் வாழ் மக்கள் என்றவகையில் போலி அலங்காரத்திற்கு இடம் கொடுக்கின்ற, வியாபாரிகளை செல்வந்தர் ஆக்கும் நத்தாரை கொண்டாடுவதற்கு ஆயத்தமாகின்றோமா?
- இன்று நாம், நாடு என்றவகையில் முகம் கொடுத்து கொண்டு இருக்கின்ற அரசியல் நெருக்கடி முன்னிலையில் நாட்டிற்கு புதிய பிற்பபை பெறுவதற்கு ‘‘கட்சி அரசியல்’’ வெறுமையாகுவதற்கு நாம் ஆயத்தமா? நாட்டை பற்றி சிந்தித்தவாறு தூய ஆவியானவர் வழிகாட்டும் விதத்தில் கட்சி அரசியலை நாம் கைவிட்டு இருக்கின்றோமா?
- புதிய பிறப்பை அனுபவிப்பதற்கு ஆயத்தமாகியவாறு பாவத்திற்கு மனம்வருந்தி மனம்திரும்புவதற்காக செபிப்போம்.
- நல்லதொரு பாவசங்கீர்த்தனத்தை செய்வோம்.

06. செயல்படுத்த :

- சமுதாயத்தின்று ஒதுக்கப்பட்ட, எளிய, துன்பப்படுகின்ற மக்களை தேடிச் சென்று நத்தாரின் மகிழ்ச்சியை கொண்டாடுவோம்.

- போதைவஸ்து போதைபொருள்களுக்கு அடிமையாகி வாழ்வை அழித்து கொள்பவர்களை, அன்பு இன்றி, ஒற்றுமை இன்றி மனநோயினால் துன்புறும், ஏழை எளியவர்களுக்காக செபிப்போம்.

07. இறுதி புகழ்ச்சி :

புபுது (சிங்கள) பாடல் இல. 175 பொருத்தமான பாடலைப் பாடவும்